## 12

# வாழ்க்கை சபிக்கப்பட்ட ஒரு மனிதன்

## [2 இராஜாக்கள் 4:14, 27, 29, 42, 43; 5:5, 10, 14–16, 19–27; 6:15; 8:4, 5]

*நாகமானைப் பற்றிய சம்பவங்கள், நீண்டவைகள் என்பது உட்பட, அவை பல விதங்களில் குறிப்பிடத்தக்கவைகளாயுள்ளன. 2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரம் முழுவதும் இதற்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக நாம் இரண்டு பாடங்களை இதுவரை வழங்கியுள்ளோம், இருப்பினும் இன்னும் ஒரு பாடம் கொடுக்கப்படவேண்டியதாயிருக்கிறது: அது கேயாசியின் முடிவு பற்றிய பாடமாக உள்ளது. அதிகாரம் 5 நாகமான் மற்றும் கேயாசி ஆகிய இருவருக்கிடையிலுள்ள வேற்றுமை பற்றி கூறும் அதிகாரமாக கருதப்படலாம்: "நாகமான் ஒரு தொழுநோயாளியாக வந்து, கர்த்தருடைய வேலைக்காரராக திரும்புகிறார். கேயாசி கர்த்தருடைய வேலைக்காரனாகத் துவங்கி, ஒரு தொழுநோயாளியாக தன் வாழ்க்கையை முடிக்கிறார்."[1]*

### கேயாசியின் குணாதிசயங்கள்
### *(4:14, 27, 29, 42, 43; 6:15; 8:4, 5)*

*"கேயாசி" என்ற பெயர் "பள்ளத்தாக்கின் பார்வை" என்று அர்த்தப்படலாம்.[2] இதற்கப்பால், கேயாசி குறித்த பின்புல தகவல் நமக்கு இல்லை. எப்போது அல்லது எங்கிருந்து அவர் எலிசாவுக்கு ஊழியம் செய்யத் துவங்கினார் என்று நமக்குத் தெரியாது. தீர்க்கதரிசிகளின் புத்திரர் பள்ளிகள் ஒன்றிலிருந்து இவர் எலிசாவால் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதற்கான சாத்தியக்கூறு உள்ளது. அந்த மாணவர்களுக்கிடையில் இவர் ஒரு திறமைசாலியான, மிகவும் நம்பிக்கையூட்டக்கூடிய ஒருவராக இருந்திருக்கலாம். எப்படியிருந்த போதிலும், இவர் வாழ்நாள் முழுவதற்குமான ஒரு பணி வாய்ப்பை பெற்றிருந்தார்: எலிசா எலியாவிடம் நேரடியாக கற்றுக்கொண்டது போல, இவருக்கும் எலிசாவுடன் பயணம் செய்யவும் நேரடியாக கற்றுக்கொள்ளவும் வாய்ப்புப் பெற்றிருந்தார். கேயாசி அந்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தியிருந்தால், நாம் இன்று இஸ்ரவேலின் வட ராஜ்யத்தின் பிரபலமான மூன்று தீர்க்கதரிசிகளைக் குறித்து பேசுகிறவர்களாக இருப்போம்: எலியா, எலிசா, மற்றும் கேயாசி.*

*இதுவரை நாம் கேயாசியின் ஆற்றலைக் குறித்து பார்த்தோம். சூனேமியாப்பெண் ஒரு மகனை விரும்பினாள் என கேயாசி முடிவு செய்ததிலிருந்து, அவனுடைய உட்பார்வை/ஆழ்ந்த அறிவு காணப்படுகிறது (4:14). சிறுவன் மரித்தபோது, எலிசா கேயாசியிடம் தன் தடியைக்*

கொடுத்தனுப்பியது கேயாசியின் நம்பகத்தன்மையை காண்பிக்கிறது (4:29). ராஜா கேயாசியிடம் தன் எஜமானின் அற்புதங்களை விவரிக்கும்படி கேட்டுக்கொண்டது, அவனுடைய புகழைக் காண்பிக்கிறது (8:4, 5).

அதே நேரத்தில், கேயாசியின் ஆவிக்குரிய முதிர்ச்சியின்மையும் அவ்வப்போது காணப்படுகிறது. துயருறும் ஒரு தாயை அவர் விலக்கிவிட ஆயத்தமாயிருந்தார் (4:27). ஒரு சிறிய சாக்குப்பையிலுள்ள உணவை நூறு பேருக்கு வழங்கும்படி சொல்லப்பட்டபோது, அதைக் குறித்து சந்தேகப்பட்டவர் அநேகமாக இந்த கேயாசியாகத்தான் இருந்திருக்கவேண்டும். சீரியாவின் இராணுவத்தைப் பார்த்து பயந்து செயலிழந்துபோனவர் இந்த கேயாசியாக இருந்திருக்கலாம் (6:15).[3]

எப்படியிருப்பினும், கேயாசியின் எல்லா தவறுகளும் மன்னிக்கப்பட்டிருப்பது மற்றும் மறக்கப்பட்டிருப்பது சாத்தியமாயிருந்தது. இவனுடைய தோல்விகள் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலருடைய தோல் விகளை விட பெரிதானவைகள் அல்ல, அவர்களில் பெரும்பாலானோர் பெரிய ஆவிக்குரிய தலைவர்களாக மாறினார்கள். முடிவாக, கேயாசியின் முடிவு, அவன் துக்ககரமான முறையில் தோல்வியடைந்த சில பரிசோதனை முடிவுகளின் மேல் அமையப்பெற்றது.

## கேயாசி சந்தித்த சோதனைகள் *(5:5, 10, 14-16, 19-26)*

**மனதுருக்கத்திற்கான ஒரு சோதனை**

கேயாசி சந்தித்த முதல் சோதனை மனதுருக்கத்திற்கான ஒரு சோதனையாயிருந்தது. நமது முந்திய பாடத்தில் நாகமான் யோர்தானில் ஏழுமுறை மூழ்க வேண்டும் என்ற செய்தியை சொல்லியனுப்ப, எலிசா பயன்படுத்தினச் செய்தியாளர் கேயாசியாக இருந்தார் என கூறியிருந்தோம் (5:10). கேயாசி வீட்டிலிருந்து வெளியே வந்தபோது, அவன் கண்களை கவர்ந்திழுத்த அந்த ஜொலிப்பான செல்வத்தின் காட்சியை கற்பனை செய்ய முயற்சியுங்கள். நாகமானின் வேலைக்காரர் தங்கள் கைகளில் ஏந்தியிருந்த பொன், வெள்ளி மற்றும் விலையுயர்ந்த ஆடைகளைப் பார்த்தபோது, அநேக மாக கேயாசியின் இருதயம் வேகமாக துடித்தது (5:5ஆ). இந்த செல்வங்களின் பாரம் எல்லாம் விலங்குகளின் மேல் ஏற்றப்பட்டு, நாகமானின் பரிவாரங்களெல் லாம் கிழக்கில், யோர்தான் நோக்கி நகர்ந்தபோது, அநேகமாக அவன் பெரிய ஏமாற்றமடைந்தான்.

அவர் சந்தோஷப்படும்படி, சில நாட்களிலேயே நாகமான் அந்த செல் வங்களை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தான் (5:15). எப்படியிருப்பினும், இராணுவ வீரர் அவைகளை வற்புறுத்தி எலிசாவுக்கு கொடுத்தபோது, கேயாசிக்கு துக்கமுண்டாக, தீர்க்கதரிசி அதை ஏற்கமறுத்துவிட்டார் (5:16அ). கேயாசியின் எண்ணங்களை என்னால் கற்பனை செய்யமுடிகிறது: "எவர் ஒருவருக்கும் ஒரு வெகுமதி பெற தகுதி இருக்கிறதென்றால், அந்த தகுதி நமக்குத்தான் இருக்கிறது - மற்றவர்களைவிட அதிக தேவை நமக்கே இருக்கிறது. நமது பொருள் வைக்கும் அலமாரி காலியாக கிடக்கிறது, மற்றும் எலிசா ஒரு புதிய அங்கியை பயன்படுத்த முடியும். அந்த விஷயத்தில், நானும் பயன்பெறக்

*கூடும்! மேலும், தீர்க்கதரிசிகளின் புத்திரர் பள்ளிகளின் தேவைகளைப் பற்றி என்ன? அந்த $ 80,000 (36,00000,00) தொகை என்பது அஞ்ஞான மனிதனுக்கு ஒரு பெரிய தொகையல்ல, ஆனால் அதை கொண்டு நாம் செய்ய சாத்தியமான நன்மையை சிந்தித்துப்பார்! எனது எஜமான் இதை பற்றி என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாரோ?" இருந்தபோதிலும், எலிசா இந்த காரியத்தில் மிகவும் உறுதியாக இருந்தார் (5:16ஆ). ஆகவே நாகமானின் பிரயாணக் கூட்டம் புறப்பட்டுவிட்டது (5:19ஆ).*

*பிரயாணக் கூட்டத்தார் புறப்பட்டதைக் கவனித்த கேயாசியின் இருதயத்தில் என்ன இருந்தது என்பதை ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர் வெளிப்படுத்தியுள்ளார்: "அந்த சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார்" (5:20அ). "விட்டுவிட்டார்" என்ற வார்த்தையை கவனியுங்கள்: "அந்த சீரியனாகிய நாக மானை ... விட்டுவிட்டார்" (5:20ஆ). கேயாசியைப் பொருத்தவரை, நாகமான் இன்னமும் ஒரு விரோதியாக, "யூதா சிறுமிகளை கடத்திக்கொண்டுபோன அவன் ஒரு தொழுநோயாளியாக தனிமைப்படுத்தப்பட்ட சாகும்படி விடப்பட்டிருக்கவேண்டிய ஒரு பகைஞனாகவே இருந்தான்."[4] கேயாசியின் மனதை பொருத்தவரை, நாகமான் ஒரு தண்டனைக்குத் தகுதியானவன்; எலிசா அவன் கொடுத்த எல்லாவற்றையும் மற்றும் கூடுதலாகவும் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதற்கு பதிலாக, எலிசா (நாம் கூறுகிறபடி) "அவனை சும்மா போகவிட்டுவிட்டார்."*

*கேயாசி மனதுருக்கத்திற்கானப் போட்டியில் தவறிவிட்டார். தங்கள் வாழ்வில் சோகத்திலுள்ள மக்களுக்கு - அவர்கள் யாராயிருந்தாலும், எத்தேசத்தவரானாலும் யூதர்கள் அவர்கள் மனதுருக்கம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என போதிப்பது இந்த கதையின் நோக்கமாயிருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இருந்தபோதிலும், யூதர்களுக்கு இந்த பாடத்தை கற்றுக்கொள்வது கடினமானதாயிருந்தது (காண்க லூக்கா 4:27, 28). புதிய ஏற்பாட்டில், இயேசுவானவர் பிதாவாகிய தேவன் இரக்கத்தை விரும்புவதாக வலியுறுத்தினார் (மத்தேயு 9:13). மறுபடியும், மறுபடியும், இயேசு "மனதுருகினார்" என கூறப்படுகிறது (மத்தேயு 20:34; மாற்கு 1:41). "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தமும் பிரியமுமாய், உருக்கமான இரக்கத்தையும் ... தரித்துக்கொண்டு ..." என பவுல் எழுதினார் (கொலோசெயர் 3:12).*

*இயேசு, லூக்கா 10ஆம் அதிகாரத்தில் மனதுருக்கத்திற்கான சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அதில் தவறின ஆசாரியன் மற்றும் பரிசேயனை பற்றி கூறியுள்ளார் (வசனங்கள் 30-32). பின்பு, அவர் அதே சோதனையில் வெற்றி பெற்ற சமாரியனைப் பற்றி கூறியுள்ளார் (வசனங்கள் 33-35). நீங்களும் நானும் ஒவ்வொரு நாளும் மனதுருக்கத்திற்கான சோதனையை எடுத்துக்கொள்கிறோம்; நாம் குறைவிலுள்ள மக்களால் சூழப்பட்டுள்ளோம். நாம் சுயத்தை மையமாக கொண்டு செயல்படுகிறவர்களாக மற்றும் "பக்கமாக விலகிப்போகிறவர்களாக" இல்லாமல் இருக்கவும் மேலும் தேவையிலுள்ளவர்களுக்கு உதவும் வழியில் அன்பின் வழியில் செயல்படவும் தேவன் நமக்கு உதவி செய்வாராக (கலாத்தியர் 6:10; எபேசியர் 4:28ஆ).*

**நேர்மையான ஒரு சோதனை**

*எலிசா நாகமானுடைய செல்வங்களை பெற்றுக் கொள்ளாவிட்டால், தான் பெற்றுக்கொள்வதாக கேயாசி தீர்மானித்தான். கேயாசி "நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே எதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன் மேல் ஆணையிடுவேன் ..." என நினைத்தான் (5:20). "கர்த்தருடைய ஜீவன் மேல்" (வசனம் 16 உடன் ஒப்பிடுக) என்ற கேயாசியின் ஆணை தொந்திரவு செய்யக்கூடியதாயிருக்கிறது; அவன் தனது பொய் மற்றும் வஞ்சகத்தை புனிதப்படுத்த தேவனுடைய பரிசுத்த நாமத்தைப் பயன்படுத்தினான். இன்றும், அந்த பரிசுத்த நாமத்தை சிறிதளவு அல்லது முழுவதுமாக பயமின்றி பயன்படுத்துகிறவர்களை எனக்கு நினைவிருக்கிறது. தேவனுடைய நாமம் "பரிசுத்தப்பட [பரிசுத்தமாய் வைக்கப்பட]" வேண்டும் (மத்தேயு 6:9); அவருடைய நாமம் வீணிலே வழங்கப்படக் கூடாது (காண்க யாத்திராகமம் 20:7).*

*நாகமானின் பிரயாணக் கூட்டத்தார் ஏற்கெனவே சென்றுவிட்டார்கள் (2 இராஜாக்கள் 5:19ஆ); ஆனால் பெரிய பிரயாணக் கூட்டமாய் இருந்தபடியால், சிலர் கால் நடையாகவும் பயணித்ததால், அவர்கள் மெதுவாக பிரயாணம் செய்திருக்கவேண்டும். கேயாசி ஓடிச் செல்வாரெனில், அவர்களை பிடித்துவிடமுடியும். "கேயாசி நாகமானைப் பின்தொடர்ந்தான்" (வசனம் 21அ).*

*நாகமான் கேயாசி தன் பிறகே ஓடிவருவதைக் கண்டு, பயணத்தை நிறுத்தினான். "அவனுக்கு எதிர்கொண்டு போக இரதத்திலிருந்து குதித்து ..." என்று வசனம் 21ஆ கூறுகிறது. இது கண்ணியத்திற்குரிய அந்த தலைவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறதாயிருக்கிறது. அவன் தன் யோர்தான் நதி அனுபவத்திற்கு முன்பு, இரதத்திலிருந்து இறங்கி, ஒரு சாதாரண வேலைக்காரனை வாழ்த்துவதை "அவமானமானதாக" நினைத்திருப்பார்.*

*இராணுவத்தலைவர் "சுகசெய்தியா?" என கேட்ட போது, அவன் கவலை தோய்ந்த முகத்தையுடையவனாக இருந்திருப்பான் (5:21இ). கேயாசி அவ்வளவாய் ஓடின பின்பு, அவன் மூச்சு வாங்க சிரமப்படுவதை நான் பார்க்கிறேன். இறுதியில், "சுக செய்திதான்" என அவனால் பதிலளிக்க முடிந்தது (5:22அ).[5] அதன்பிறகு, வேலைக்காரன் உதட்டிலிருந்து கவனமாய் திட்டமிட்டத் தொடர் பொய்கள் வந்தன:*

*பொய் எண் #1: "என் எஜமான் என்னை அனுப்பினார்" (5:22ஆ).*

*பொய் எண் #2: "தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுதான் எப்பிராயீம் மலைதேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்" என [எலிசா சொல்ல சொன்னார்] (5:22இ). (இந்த கற்பனையான வாலிபர்கள் பெத்தேலிலுள்ள பள்ளியிலிருந்து வந்திருப்பார்கள்.)*

*பொய் எண் #3: "அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் [எஜமான் என்னை அனுப்பினார்]" என்றான் (5:22ஈ). (கேயாசி அதிகமானதை விரும்பினான். ஆனால் ஒரு நம்பதகுந்த பொய்யைச் சொல்ல*

வேண்டுமென்பதற்காக பொய்யை மாற்றியமைத்தான்.)

*நாகமான் கேயாசியை சந்தேகப்படுவதற்கு எந்த காரணமும் இருக்கவில்லை. ஆனால் அவன் வேண்டுகோளினிமித்தம் அநேகமாக சந்தோஷப்பட்டான். உரியவகையில் தனது பாராட்டைத் தெரிவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அது அவனுக்கு கொடுத்தது. கேயாசி ஒரு தாலந்து வெள்ளியை கேட்டான், ஆனால் நாகமான் அவனுக்கு இரண்டுதாலந்து கொடுத்தான் (5:23அ). தனக்கு அளிக்கப்பட்டதைக் குறித்து வேலைக்காரன் பெருமையடைந்திருப்பான், ஆனால் கிழக்கத்திய கலாச்சாரம் வெகுமதிகள் பெறுவதை நிராகரிக்கும்படி கோருகிறகிறது. நாகமான் கொடுத்தலில் தன் பங்கை நிறைவேற்றி, பெற்றுக்கொள்ளும்படி, அவனை "வருந்தி கேட்டுக் கொண்டான்"[6] (5:23ஆ). சம்பிரதாயங்கள் முடிந்தபின், கேயாசி சற்று "தயக்கத்தோடு" ஏற்றுக்கொண்டான், ஆகவே நாகமான் இரண்டு தாலந்து வெள்ளியையும், மாற்று வஸ்திரங்களையும் கொடுக்க கட்டளையிட்டான் (வசனம் 23இ). இந்த பொருட்கள் 120-150 பவுண்ட் (55-68 கிலோ) எடையுள்ளதாக இருந்திருக்கு மாகையால், பரிசுப்பொருட்களை எலிசாவிடம் கொண்டு சேர்க்க உதவியாக இரண்டு வேலைக்காரரை நியமித்தான் (5:23ஈ).*

*இறுதியாக, கேயாசியும் நாகமானுடைய வேலைக்காரரும் "மேட்டண்டைக்கு" வந்தனர் (5:24அ). "மேடு" என்பதற்கான எபிரேய வார்த்தை தெளிவாக இல்லாததால்[7] (KJV மொழிபெயர்ப்பில் "கோபுரம்" என்றுள்ளது), அந்த வார்த்தை பட்டணத்திற்கு வெளியே இருந்த ஒரு "பிரபலமான மலையை" குறிப்பதாக இருக்கக்கூடும்.[8] கேயாசி அந்த மனிதர் தொடர்ந்து முன்னேறி செல்வதை அனுமதிக்க அவனுக்கு தைரியமிருக்கவில்லை. அவர்கள் பட்டணத்திற்கு அருகாமையில் வந்தால் - அவர்கள் மக்களால் பார்க்கப்படுவார்கள் - பின் மக்கள் அவர்களோடு வினவக்கூடும். மேலும், நாகமானின் வேலைக்காரர் எலிசாவின் வீடுவரை சென்றால், அவர்கள் எலிசாவை பார்க்கவந்த இரண்டு வாலிப பயிற்சியாளரை சந்திக்க வாய்ப்புக் கேட்டிருப்பார்கள்.*

*கேயாசி மனிதரை நிறுத்தி, நாகமானிடத்திற்கு அனுப்பிவிட்டான் (5:24ஈ). அவன் அநேகமாக இவ்விதமாக ஏதோ சொல்லியிருப்பான்: "என்னால் இங்கிருந்து எடுத்துச் செல்ல முடியும், உங்கள் உதவிக்கு நன்றி. நாகமான் வீடு திரும்ப ஆசையாயிருக்கிறார், ஆகவே நீங்கள் பிரயாணக் கூட்டத்தாரோடு இருக்க வேண்டிய அவசியமிருக்கிறது. இது எந்த அளவுக்கு தீர்க்கதரிசிக்கு உதவியாக இருக்கும் என்பதை நாகமானிடம் சொல்ல மறந்துவிடாதீர்கள்." அந்த மனிதர்கள் ஆச்சரியப்பட்டிருப்பார்கள், ஆனால் அவர்கள் அந்த சாக்கு பைகளை கேயாசியிடம் கொடுத்துவிட்டு (5:24ஆ), போய்விட்டார்கள் (5:24உ).*

*கேயாசி, "அதை வீட்டிலே வைத்தான்" என வசனப்பகுதி கூறுகிறது (5:24இ). இது அந்த பகுதியிலிருந்த வேறு ஒரு வீடாக இருந்திருக்கலாம், ஆனால் அது கேயாசி தன் எஜமானோடு பகிர்ந்துகொண்ட ஒரு எளிய வீடாயிருந்தது. நான் பின்வரும் தொடர் நிகழ்வுகளை இவ்விதம் காட்சிப்படுத்துகிறேன்.*

கேயாசி ஒவ்வொரு கையிலும் கனமான பைகளை வைத்துக் கொண்டு மலையிலிருந்து தடுமாறி கீழே இறங்கினான். அவன் அந்த பட்டணத்தின் வெளிப்பகுதியை அடைந்து, குறுகலான தெருக்கள் வழியாக சென்றான்.

*அவ்வப்போது, அவன் நின்று மூச்சு வாங்கிக்கொண்டு, வலிக்கும் கை தசைகளுக்கு ஓய்வு கொடுத்தான். இறுதியாக, தன் வீட்டை அடைந்தான். அவன் சாக்கு மூட்டைகளை வைத்துவிட்டு, முன் கதவை திறந்து, உள்ளே எட்டிப்பார்த்தான். எலிசா அங்கு காணப்படவில்லை. நல்லது! அவன் அந்த பைகளை எடுத்துக்கொண்டு, தான் தூங்கும் இடத்திற்கு சென்றான். பைகளை ஒரு மூலையிலே வைத்து, கிழிந்த துணிகளால் அதை மூடிவைத்துவிட்டு, சற்றே பின் சென்று, தான் செய்திருந்ததை மீண்டும் பார்வையிட்டான். மிகவும் அருமை! கிழிந்த துணிகளின் கீழ் ஒரு புதையல் இருக்கிறது என்று ஒருவரும் சந்தேகப்படமாட்டார்கள். அவன் ஒரு நிம்மதி பெருமூச்சுவிட்டான். அவன் அதை செய்து முடித்துவிட்டான்! அவன் நாகமானை (போர்வீரன் அதற்கு பாத்திரனாயிருந்தான்) கொள்ளையிட்டான், ஆனால் அதே சமயத்தில் இவன் தன்னை ஐசுவரியவனாக்கிக் கொண்டான். அவன் அந்த பொன், வெள்ளி, விலையுயர்ந்த வஸ்திரம் இவற்றால் வரும் பணத்தை கொண்டு, எதையெல்லாம் வாங்கி குவிக்கமுடியும் என தன் மனதில் சிந்திக்க ஆரம்பித்தான்.[9] அவன் ஒரு வசதியான பிரபுவாக மாறி, ஒலிவத் தோப்புகள், திராட்சைத் தோட்டங்கள் மற்றும் ஆடுமாடுகளை கொண்டிருக்க முடியும் (வசனம் 26இ). அவனால் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்கக்கூடும் (வசனம் 26ஈ). அவன் ஒரு வேலைக்காரனாக இருப்பதற்கு பதிலாக, வேலை செய்யப்படும் நிலையில் இருப்பான்! எப்படியிருப்பினும், அவன் எலிசா சந்தேகப்படுவதை விரும்பவில்லை. ஏற்கெனவே, அவன் நீண்ட நேரம் போய் வந்திருக்கிறான். அவன் தன் உடைகளை சரிசெய்து கொண்டான், தன் உடையை தூசிதட்டினான், கண்ணிமையை சரிசெய்து கொண்டு தனது நீண்ட முடி மற்றும் தாடி வழியாக விரல்களை விட்டவாறே, எலிசாவை தேடிக்கொண்டு போனான்.*

அவன் ஒன்றும் அறியாதவன் போல் காட்சியளித்துக் கொண்டு, "உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான்" (வசனம் 25அ). நான் ஒரு சிறுவனாயிருந்து, ஏதாவது ஒரு தவறைச் செய்திருந்தால், என் தாயார் அங்கு வந்து நின்றிருப்பார்கள். நான் குற்றமற்றவனாக என்னை காண்பித்துக் கொள்ள கடினமாய் முயற்சி செய்தேன்! ஒருவேளை, நீங்கள் இளைஞராக இருந்த போது, இப்படிப்பட்ட அனுபவங்களை உடையவர்களாக இருந்திருப்பீர்கள்.

எலிசா அவனை நோக்கி, "கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய்?" என்று கேட்டான் (5:25ஆ). அதற்கு அவன், "உமது அடியான் எங்கும் போகவில்லை" என்றான் (25இ). முன்பு, கேயாசி பகைக்கத் தக்க ஒரு எதிரியிடத்தில் பொய் சொல்லுவதில் ஒன்றும் தீமை இல்லை என நினைத்திருக்கலாம், ஆனால் இப்போது அவன் தேவனுடைய தீர்க்கதரிசியிடத்தில் பொய் சொல்லிக் கொண்டிருந்தான்! இது பொய்யின் பிரச்சனைகளில் ஒன்றாக உள்ளது: ஒரு முறை ஒருவன் பொய் சொல்லத் துவங்கினால், அதை அவன் தொடர்ந்து சொல்ல வேண்டியதாகும்; பழைய பொய்களை மறைக்க அவன் புதிய பொய்களைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிருக்கும். ஒரு பொய் இன்னொரு பொய்யைப் பெறுகிறது. "ஓ! முதல் முறை நாம் ஏமாற்ற முயற்சி செய்யும் போது, எப்படிப்பட்ட மாய வலையை நாம் பின்னக்கூடியவர்களாயிருக்கிறோம்!"[10] கேயாசி நேர்மைக்கான

*சோதனையில் தவறிவிட்டான்.*

*அநேகர் இந்த சோதனையில் தவறிவருகிறார்கள் என நான் அஞ்சுகிறேன். நேர்மையின்மை அதிகமாக பெருகிவருவதாக தோன்றுகிறது. கேயாசி, ஒரு அஞ்ஞானியிடம் பொய் சொல்வது சரி என நினைத்திருக்கக்கூடும் மற்றும் இன்றும் சிலர் சில (தங்களை "நேர்மையானவர்கள்" என்று கருதுபவர்கள்) சந்தர்ப்பங்களில் பொய் சொல்வதில் தவறில்லை என நினைக்கிறார்கள்: உதாரணமாக, வருமான வரி செலுத்துவது தொடர்பாக அரசாங்கத்திடம் பொய் சொல்வது, வேகமாக வாகனத்தை ஓட்டியதை விசாரிக்கும் போக்குவரத்து காவலரிடம் பொய் சொல்வது, தவறாக காப்பீடு பணத்தைப் பெறுவதற்கு பெரிய நிறுவனங்களிடத்தில் பொய் சொல்லுதல் போன்றவைகளாகும். எப்படியிருந்தாலும், யார் சொன்னாலும் அல்லது யாரிடம் சொன்னாலும் - பொய் - பொய்யாகத்தான் இருக்கிறது. "... பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என வேதாகமம் பிரகடனப்படுத்துகிறது (வெளிப்படுத்தின விசேஷம் 21:8).*

*பவுலின் வார்த்தைகள் நம் ஒவ்வொருவருக்கும் சவாலாயுள்ளது. "... பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25ஆ). மறுபடியுமாக, அவர் "நாம் அன்புடன் சத்தியத்தைப் பேசவேண்டும்" என வலியுறுத்திக் கூறியுள்ளார் (எபேசியர் 4:15). சிலருக்கு மற்றவர்களை விட, நேர்மையாயிருப்பது கடினமாக இருக்கிறது. ஆனால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நாம் எல்லாரும் நேர்மைக்கான சோதனையை எடுத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒரு விதியின்படி, பொய்கள் ஆதாயத்திற்காக அல்லது ஒருவருடைய செய்கையின் விளைவுகளிலிருந்து தப்பிக்கொள்வதற்காக சொல்லப்படுகின்றன. அடுத்த முறை நீங்கள் உண்மையை சொல்வதைவிட பொய் சொல்வது ஆதாயமாயிருக்கும் அல்லது அதிக பாதிப்பில்லாதிருக்கும் என நீங்கள் நினைக்கும் போது, கேயாசியினுடைய பொய்யின் விளைவுகளை உங்களுக்கு நீங்களே நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். தேவனானவர் பொய் கூறுதலை லேசானதாக எடுத்துக்கொள்வதில்லை; அவர் "பொய் நாவை" வெறுக்கிறார் (நீதிமொழிகள் 6:16, 17)!*

***பொருளாசைக்கான ஒரு சோதனை***

*கேயாசி, தான் எங்கே சென்றிருந்தான் என்பது பற்றி பொய் சொன்னபோது, அது தேவன் தன் எஜமானுக்கு அறிவியாமல் மறைத்து வைக்கிற சம்பவங்களில் ஒன்றாக இருக்கக்கூடும் என நம்பினான் (காண்க 4:27) - ஆனால் அது அப்படியிருக்கவில்லை. கர்த்தர் எல்லாவற்றையும் எலிசாவுக்கு வெளிப்படுத்தியிருந்தார். அப்பொழுது தீர்க்கதரிசி அவனை நோக்கி, "அந்த மனுஷன் (நாகமான்) உனக்கு எதிர் கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன் கூடச் செல்ல வில்லையா?" என்றான் (5:26அ; ஒப்பிடுக யோவான் 1:48). இவ்வாறு கேயாசியின் செயல் வெளிப்படுத்தப்பட்டுவிட்டது.*

*எலிசா அவனை நோக்கி, "பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களை ... வாங்குவதற்கும் இது காலமா?" என்று கேட்டான் (5:26ஆ). தீர்க்கதரிசி பணம் தொடர்பான தன் வேலைக்காரனின் இருதய திட்டங்களையும் அறிந்திருந்தார்: "ஒலிவத் தோப்புகளையும், திராட்சை தோட்டங்களையும் ஆடுமாடுகளையும்*

வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?" (5:26ஆ, இ) இப்படியாக, கேயாசியின் பேராசை வெளிப்படுத்தப்பட்டது.

இது யெகோவாவின் தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் மற்றும் சீரியாவின் கள்ள தீர்க்கதரிசிகளிடத்திலிருந்து வித்தியாசப்பட்டவர்கள் என்பதை நாகமானுக்குக் காண்பிப்பதற்கான நேரமாக *இருந்தது*. இது தேவனுடைய ஆசீர்வாதங்களை பணத்தினால் வாங்க முடியாது என்பதை காண்பிப்பதற்கான *நேரமாயிருந்தது*, தேவனுடைய கிருபையிலிருந்து ஒருவர் தனிப்பட்ட முறையில் லாபம் அடைவதற்கான நேரமாக அது *இருக்கவில்லை*. பொய் சொல்லுதல் மற்றும் ஏமாற்றுவதற்கான நேரமாக அது *இருக்கவில்லை;* எந்த காலமும் இதை செய்வதற்கான காலமாக *இருப்பதில்லை*.

வேதாகமம் கேயாசி எப்படி பேராசையின் உச்சிக்கு சென்று, அதை திருப்தி செய்ய எதையும் செய்யவிருப்பமுள்ளவனானான் என்று நமக்கு சொல்வதில்லை. ஒருவேளை அவன் எலிசாவோடு தன் பணி பயிற்சியை மிகவும் உற்சாகமாக துவங்கியிருந்தான். தீர்க்கதரிசியோடு இருப்பது தன் வாழ்க்கையை எளிதாக்கும் என ஒரு வேளை அவன் நினைத்தான். அப்படியானால், அது ஒரு கற்பனை என்பதை சீக்கிரமாகவே அறிந்து கொண்டான். அவன் இவ்விதம் சிந்திக்கிறதை நான் கற்பனை செய்கிறேன்; "நமக்கே கொஞ்சம் பொருள்கள் தான் இருக்கின்றன, யாராவது எப்போதாவது எதையாவது நமக்கு கொடுக்கும் போது, எலிசா அதையும் மற்றவர்களுக்கு கொடுத்துவிடுகிறார் [காண்க 4:42]! என் எஜமானுக்கு மட்டும் கொஞ்சம் புத்திசாலித்தனம் இருந்திருந்தால், நாங்கள் இருவருமே பணக்காரர்களாக இருக்கக் கூடும்!" மறுபடியுமாக, கேயாசியின் மனதில் என்ன நடந்தது என நமக்கு தெரியாது, ஆனால் இது மட்டும் நமக்கு நன்றாக தெரியும்: அவன் பொருளாசைக்கான சோதனையில் தவறிவிட்டான் - துக்ககரமான முறையில் தவறிவிட்டான்.

துவக்க காலத்திலிருந்தே, பொருளாசை (பேராசை) என்பது மனித இனத்தின் ஒரு மிகப்பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது. பழைய ஏற்பாட்டில், பத்து கட்டளைகளின் கடைசி கட்டளை, "... இச்சியாதிருப்பாயாக" என போதித்தது (யாத்திராகமம் 20:17). புதிய ஏற்பாட்டில், இயேசுவானவர், "பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்று போதித்தார் (லூக்கா 12:15). மனித இனத்தின் பாவத்தன்மையை குறித்து விளக்கியபோது, பவுல் "அவர்கள் ... பொருளாசையினாலும் ... இருக்கிறார்கள்" என கூறினார் (ரோமர் 1:29). மேலும் அவர், "எப்படியெனில், மனுஷர்கள் ... பணப்பிரியராயும் ... தேவபிரியராய் இராமலும் இருப்பார்கள்" என எழுதினார் (2 தீமோத்தேயு 3:2-4).

பொருளாசை என்ற பாவத்திற்கு எதிராக தடுப்பாற்றல் பெற்றவர்கள் ஒருவருமில்லை. ஏழைகளுக்கு எப்போதும் தேவையான அளவு பொருட்கள் இருப்பதில்லை. பணக்காரர்கள் ஒருபோதும் தாங்கள் விரும்பிய எல்லாவற்றையும் பெற்றிருப்பதில்லை. எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு அறைகூவலை முன்வைக்கிறார். "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபிரேயர் 13:5). எலிசா பொருளாசை கேயாசியின்

*இருதயத்தை எப்போது சாம்பலாக்கியது என்பதை அறிந்திருந்தார், மற்றும் எப்போதும் இருக்கக்கூடிய இந்த சோதனைக்கு நாம் கீழடங்கும்போது கர்த்தர் அறிகிறார்: அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு மிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (எபிரேயர் 4:13). பொருளாசை என்ற சோதனையை நாம் சந்திக்கும் போது, அதை மேற்கொள்ள கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக!*

## *கேயாசியின் சோகம் (5:27)*

*கேயாசி தன் நேர்மையின்மை வெளிப்படுத்தப்பட்டபோது, அதை எப்படி உணர்ந்திருப்பார், அவர் எவ்வளவு மனக்கலக்கம் அடைந்திருக்கக்கூடும் என்பதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? எப்படியிருப்பினும், மிகமோசமானது இனிமேல்தான் வரவேண்டியிருந்தது. எலிசா தொடர்ந்து பேசியபோது, "ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததி யாரையும்[11] என்றைக்கும் பிடித்திருக்கும்" என்றான் (2 இராஜாக்கள் 5:27அ). சிலர் இதை "poetic justice" என கூறுகிறார்கள்; சிலர் இது "குற்றத்திற்கு சரியான தண்டனை" என கண்டுள்ளனர்.*

*ஒரு சிலர் "ஒரு நிமிடம் பொறுங்கள். கேயாசி ஏன் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன், ஆனால் அவன் சந்ததியார் ஏன் தண்டிக்கப்பட வேண்டும்? அவர்கள் குற்றமிழைத்தவர்களாக இருக்கவில்லையே" என வாதிடுகிறார்கள். தேவனானவர், "பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராக இருக்கிறார்" என மோசேயின் பிரமாணம் போதித்தது (யாத்திராகமம் 20:5; காண்க யாத்திராகமம் 34:7; எண்ணாகமம் 14:17; உபாகமம் 5:9). கிளைடு மில்லர் என்பவர் பின்வரும் ஆலோசனையை கொடுக்கிறார். "பாவம் பயங்கரமானது, அது அதை செய்தவர்களையும் தாண்டி அவரை சார்ந்தவர்களையும் பாதிக்கிறது என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்கு அநேகமாக இந்த கடுமையான தண்டனை கொடுக்கப்பட்டிருக்கலாம்."[12] "தேவனோடு வழக்காடுகிறவர்கள் யாரோ, அதை அவர்கள் செய்யட்டும்" என குர்மாச்சூர் எழுதினார்.[13]*

*அக்கிரமத்தின் <u>குற்றம்</u> அல்ல, அதின் <u>விளைவுகளே</u> பிள்ளைகள் மேல் வந்தது என்பதை நான் வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன். இன்று நாம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்வதில்லை. எப்படியிருப்பினும் நாம், நம்மை பற்றி கவனிக்கும்போது, "பிதாக்களின் அக்கிரமம்" (யாத்திராகமம் 20:5) பிள்ளைகள் மேல் கடந்து வருகிறது என்பது இன்னமும் உண்மையாயிருக்கிறது:*

- *கடுமையாய் நடத்தும் பெற்றோரின் பிள்ளை, தங்கள் சொந்த பிள்ளைகளை கடுமையாய் நடத்துவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.*
- *விவாகரத்து பெற்ற பெற்றோரின் பிள்ளை தாங்களும் விவாகரத்து பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.*
- *ஒரு குடிகாரனின் பிள்ளை தானும் ஒரு குடிகாரனாக மாற வாய்ப்பு இருக்கிறது.*

*உங்கள் பெற்றோர் அல்லது உங்கள் பெற்றோரின் பெற்றோர் ஒரு*

*குறிப்பிட்ட பாவத்தை செய்திருந்தால். நீங்களும் அதை செய்வதைத் தவிர்க்க முடியாது என நான் கூறுகிறேனா? இல்லை! தேவனுடைய உதவியினால், நீங்கள் அந்த சுழற்சியை முறிக்க முடியும். நான் என்ன கூற வருகிறேனென்றால், நீங்கள் ஒரு பாவத்தை செய்வதற்கு முன்பு, அது உங்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. நீங்கள் யாரை அதிகமாய் நேசிக்கிறீர்களோ, அவர்களே அதிகமாய் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கக் கூடும்!*

*தீர்ப்பு கூறப்பட்டுவிட்டது, தண்டனை உடனே நிறைவேறிவிட்டது. கேயாசி, "உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் [எலிசாவின்] சமூகத்தை விட்டுப் புறப்பட்டுப்போனான்" (2 இராஜாக்கள் 5:27ஆ; ஒப்பிடுக எண்ணாகமம் 12:10) ஒரு இமைப்பொழுதில், கேயாசியின் பேராசை கனவுகள் தகர்ந்து விட்டன. அவன் இனி ஒருபோதும் பணக்கார நில பிரபுவாக இருக்கமாட்டான்; அவன் ஒருபோதும் வேலைக்காரரைக் கொண்டிருக்க மாட்டான். அதற்கு மாறாக, அவன் தன் எஞ்சிய வாழ்நாளெல்லாம் சமூகத்திலிருந்து தள்ளப்பட்டு தனிமையிலிருப்பான்; அவனிடத்தில் செல்வங்கள் நிறைந்திருக்கும் ஆனால் அதை யாரும் தொடமாட்டார்கள்.[14]*

*உலகம் பாவத்தை லேசாக எடுத்துக்கொள்கிறது, பாவம் செய்தால் அதற்கு தண்டனை உண்டு என்ற உண்மையை எள்ளி நகையாடுகிறது. கேயாசியின் மாம்சம் அழுகி, கீழே விழுகிறதை பார்த்து, "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானாது" என்பதை கற்றுக்கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 13:15). இன்றைய நாட்களில் தண்டனைகள் சரீரபிரகாரமானவைகளாக இல்லாமல், ஆவிக்குரியவைகளாக உள்ளன, ஆனால் அது குறைவான தண்டனை என்பது அதின் பொருளல்ல. பவுல் "பாவத்தின் சம்பளம் மரணம் ..." என எழுதினார் (ரோமர் 6:23அ) - அது ஆவிக்குரிய மரணம் (காண்க எபேசியர் 2:1), தேவனிடத்திலிருந்து பிரிந்திருப்பதாக இருக்கிறது (ஏசாயா 59:2; 2 தெசலோனிக்கேயர் 1:10). இயேசு [தங்கள்] "பாவங்களில் சாகிறவர்கள்," "நான் போகிற இடத்துக்கு [பரலோகம்] வர உங்களாலே கூடாது" என்றார் (யோவான் 8:21).*

*உங்கள் வாழ்க்கையில் மன்னிக்கப்படாத பாவம் இருக்குமானால், ஒரு இமைப்பொழுதுகூட தாமதிக்காதீர்கள் - தயங்காதீர்கள் - உடனே தேவனுடைய இரக்கங்களின் கீழ் உங்களை கொண்டு வாருங்கள்! "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரை தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்" (ஏசாயா 55:6)! யோவான், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று எழுதினார் (1 யோவான் 1:9). அவர் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதிக்கும்படி, உங்கள் பாவத்தை அறிக்கையிடுங்கள். நீண்ட காலதாமதமாவதற்கு முன்பு அதை செய்யுங்கள் (எபிரேயர் 3:13; 2 கொரிந்தியர் 6:2)!*

## முடிவுரை

*2 இராஜாக்கள் 5ஆம் அதிகாரத்தில் நமது பாடங்களில் நாகமான் மற்றும் கேயாசி ஆகிய இருவருக்கும் இடையிலான வேற்றுமைகளைப் பார்த்தோம். இன்று நீங்கள் நாகமானைப்போல இருக்கமுடியும்: பாவம் என்னும்*

*தொழுநோயிலிருந்து நீங்கள் கழுவப்பட்டு தேவனுடைய ஊழியக்காரனாக மாற முடியும். ஏனெனில், "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23). கிறிஸ்து தம் இரத்தத்தின் மூலமாக உங்களைக் கழுவி சுத்தி கரிக்க வல்லவர் (1 பேதுரு 1:18, 19)! இன்றே அவரண்டை கிட்டிச்சேருங்கள்!*

---

குறிப்புகள்

[1]*இது* Charles Swindoll*லின் "நாகமானும் கேயாசியும்: எதிரிடை பண்புகள்" என்ற வானொலி பிரசங்கத்திலிருந்து* n.d.*சேகரிப்பட்டது.* [2]M. A. Macleod, "Gehazi," in *The International Standard Bible Encyclopedia,* rev., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:423. [3]M. R. Wilson, "Gehazi," in *The Zondervan Pictorial Encyclopedia of the Bible*, ed. Merrill C. Tenney (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 2:670. *இந்த கதை அடுத்த பாடத்தில் கூறப்படும்.* [4]Warren W. Wiersbe, *Be Distinct* (Colorado Springs, Colo.: Victor, 2002), 36. [5]*நாகமானும் கேயாசியும் ஒரு வகையான வணக்கத்தை உபயோகித்தார்கள்* (Adam Clarke, *The Holy Bible with a Commentary and Critical Notes,* vol. 2, *Joshua-Esther* [New York: Abingdon-Cokesbury Press, n.d.], 499. [6]*"அவன் வருந்திக் கேட்டுக்கொண்டான்" என்ற வார்த்தைகள் சம்பிரதாயப்படி கேயாசி முதலில் அதை பெற்றுக்கொள்ள மறுத்தான் என்பதை உணர்த்துகிறது.* [7]Clyde M. Miller, *First and Second Kings,* The Living Word Commentary series, vol. 7 (Abilene, Tex.: A.C.U. Press, 1991), 337. [8]C. F. Keil and F. Delitzsch, "1 and 2 Kings," *Commentary on the Old Testament,* vol. 3, *1 and 2 Kings, 1 and 2 Chronicles, Ezra, Nehemiah, Esther* (Peabody, Mass.: Hendrickson Publishers, 1989), 322. [9]*பெரும்பாலான எழுத்தாளர்கள் வசனம் 26இல் உள்ள எலிசாவின் வார்த்தைகள், அவை கேயாசியின் சிந்தையாக இருந்தது என்று நம்புகிறார்கள். பழங்காலத்து "டர்கூம்"களில் ஒன்று "அதை செய்ய அவன் தன் இருதயத்தில் நினைத்திருந்தான்" என கூடுதல் தகவல் தருகிறது (காண்க* Clarke, 499). *(டர்கூம் என்பது பழைய ஏற்பாட்டின் ஒரு பகுதியை அரமாயிக் மொழியில் மொழிபெயர்த்தலாகும். இந்த மொழி பெயர்ப்புகள் வசனங்களுக்கான பொழிப்புரை மற்றும் விளக்கங்களை தருகின்றன.)* [10]Sir Walter Scott, *Marmion* [1808], 6.17; quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 378.

[11]*கேயாசி ஒருபோதும் திருமணமாகாமல் இருந்திருந்தால், குஷ்டரோகம் பரவும்படி அவனுக்கு பின் சந்ததியார் இருந்திருக்கமாட்டார்கள். ஒரு குஷ்டரோகியை மணக்க ஒருவரும் முன்வரமாட்டார்கள் என்ற நிலையில், அவன் நிலை இப்படியாக இருந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.* [12]Miller, 337. [13]F. W. Krummacher, *Elisha, a Prophet for Our Times* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1993), 218. [14]*ஒரு எழுத்தாளர், கேயாசி தன் பாவத்திலிருந்து மனந்திரும்பி, மீரியாம் சுகமானது போல சுகமானார் என்ற ஆலோசனையை கொடுத்துள்ளார் (எண்ணாகமம் 12:10-15). அதிகாரம் 8ல் கேயாசி ராஜாவுக்கு முன்பாக இருந்தார் என்பதினடிப்படையில் இந்த முடிவுக்கு வந்துள்ளார்கள். எப்படியிருந்தாலும், முன்பு குறிப்பிட்டபடி, அதிகாரம் 8:1-6 இன் சம்பவங்கள் அதிகாரம் 4:38இன் பஞ்சத்தோடு அநேகமாக தொடர்புடையதாக இருக்கிறது, இந்த அடிப்படையில் இது நாகமானின் கதைக்கு முன்னர் சம்பவித்தது. எலிசாவின் சமூகத்தை விட்டுச் சென்றபின் கேயாசிக்கு என்ன சம்பவித்தது என்பதை வேதாகமம் நமக்கு சொல்வதில்லை.*